# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2366/11 - 2024 ජනවාරි මස 09 වැනි අඟහරුවාදා - 2024.01.09

*2366/11 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***1 ஆவது திருத்தம்***

இலங்கை வெளிநாட்டுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1996/28 மற்றும் 2016, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டுச் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**டபிள்யூ. எச். எம். எம். சீ. கே. தயாரத்ன**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2024, சனவரி 01.*

| *தொடர் இல.* | *திருத்தம்* |
|---|---|
| *7.2.4.1* | அட்டவணைக்கு கீழே "எழுத்துமூலப் பரீட்சைக்கு ஏற்புடைய பாடத்திட்டம் மற்றும் தகவல்கள் "அ" பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன." எனும் பிரயோகம் "எழுத்துமூலப் பரீட்சைக்கு ஏற்புடைய பாடத்திட்டம் மற்றும் பரீட்சை நடாத்தப்படும் முறை தொடர்பான தகவல்கள் "அ" பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன" என திருத்தியமைக்கப்படுகின்றது. |


1A - G 41217 — 07 (2024/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| *தொடர் இல.* | *திருத்தம்* |
|---|---|
| 72.4.3 | இதன் கீழுள்ள குறிப்பில் இல 1 பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.<br><br>1. எழுத்துமூலப் பரீட்சையின் வினாத்தாள்கள் ஏழுக்கும் (07) தோற்றி, 300 புள்ளிகளுக்கு குறையாமல் மொத்தப் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரர்களில் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் ஐந்து மடங்கு எண்ணிக்கைக்கு மேற்படாத விண்ணப்பதாரிகள் மாத்திரம் தகுதிகாண் மதிப்பீட்டுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். |
| பின்னிணைப்பு<br>"அ" இலுள்ள<br>பகுதி 1 இல் பகுதி "ஆ" | நேர்முகப் பரீட்சைக்கு கீழுள்ள குறிப்பு நீக்கப்பட்டு பின்னிணைப்பு "அ" (1) பரீட்சைத் திட்டம், பகுதி "அ" இன் கீழுள்ள அட்டவணைக்கு கீழே பின்வரும் குறிப்பு உள்ளடக்கப்படுகின்றது.<br><br>குறிப்பு<br><br>I. சகல விண்ணப்பதாரிகளுக்கும் முதலில் பல்தேர்வு வினாத்தாள் மாத்திரம் நடாத்தப்படும்.<br><br>II. பல்தேர்வு வினாத் தாளில் சித்தியடைய வேண்டிய ஆகக் குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் எஞ்சிய பாடங்களுக்கான போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். |

EOG 01-0075

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.